★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 35630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 15உ திங்கள் (27-2-56) ★ ★ வெளியூர்: மாசி 16உ செவ்வாய் (28-2-56) [இதழ் 218

இந்தித் திணிப்பு நடவடிக்கைகள்

புதுடில்லி, பிப். 24—

சர்க்கார் வேலைகளை இந்தியில் நடத்திவருவதற்கு வசதியாக, டில்லி சர்க்கார் ஊழியர்களில் இந்தி தெரியாதவர்கள் யாவருக்கும் மிகக் குறுகிய காலத்தில், இந்தியைக் கற்றுத்தருவதற்காக விரிவான திட்டமொன்றை, மத்திய உள்விவகார மந்திரி அலுவலகம் தயாரித்துவருகிறதாம்.

தற்போது, மத்திய கல்வி மந்திரி காரியாலயம், இந்திய சர்க்கார் ஊழியர்களுக்காக ஒன்பது இந்தி நிலையங்களை நடத்திவருவ

(4-ம் பக்கம் பார்க்க)

செங்கோட்டையில் 59 சதுர மைல் கேரளத்திற்காம்!

டெல்லியின் உத்தரவுப்படி 'சர்வே' நடைபெற்றதாம்!

திரு-கொச்சி சர்க்கார் தீவிரம்!

திருவனந்தபுரம், பிப். 25—

சென்னை காங்கிரஸ் அமைச்சர்களின் 'ஒப்புதலின்' பேரில்—காமராசர் சம்மதத்துடன் டெல்லியார், 'கேரளத்திற்குச் செங்கோட்டையிலும் பாதி தரப்படும்' என்று தீர்ப்பு வழங்கினர் அல்லவா?

அந்தத் தீர்ப்புக்கு எதிராகத் தமிழகம் திரண்டெழுந்துள்ள நிலையை டெல்லி ஆழ்ந்து கருதிக் கொண்டிருக்கும்போதே, திரு-கொச்சி சர்க்கார், செங்கோட்டையில் தங்களுக்கு இவ்வளவு பகுதிகள் சேர வேண்டும் என்ற கணக்கைத் தயாரித்து வெளியிட்டிருக்கிருர்கள்.

திரு-கொச்சி சர்க்கார், இந்தக் கணக்கெடுப்பிற்காக நியமித்த 'சர்வே குழு, தனது அறிக்கையை தந்துவிட்டதாம்.

மொத்தம் 129 சதுர மைல் நிலபரப்புள்ள இந்த வட்டத்தில், 59 சதுர மைல் பரப்பளவு கேரளத்திற்குரிய தென்று அந்தக் குழு கணக்கிட்டுத் தெரிவித்திருக்கிறதாம்.

டில்லி சர்க்காரின் உத்தரவின் படிதான் திரு-கொச்சி சர்க்கார், இந்த 'சர்வே' குழுவை அனுப்பிற்ரும்!

இந்த 'சர்வே' குழுவிற்கு திரு-கொச்சி மாநில உதவி 'சர்வே' அதிகாரியான கிரிஜா வல்லப மேனன் தலைவராக இருந்தாராம்; அவருக்கு உதவியாக எட்டு சர்வேயர்களும், பாதுகாப்புப் போலீசாரும், பட்டாளமும் சென்றனராம்.

பஞ்சாப் பற்றி இறுதி முடிவு?

அகாலியருடன் பேச்சுவார்த்தை முறிவு

பஞ்சாப் மாநிலப் புது அமைப்பு குறித்து அகாலிதள தலைவர் மாஸ்டர் தாராசிங், மற்றும் இதரருடன் டில்லி சர்க்கார் நடத்திய பேச்சுக்கள் முறிந்துவிட்டன.

இந்தியாவிலேயே மாநிலப் புது அமைப்பு குறித்து காங்கிரஸ் மேலிடத்தவரும், டில்லி சர்க்காரும் பேச்சுவார்த்தை நடத்திய காங்கிரசல்லாத கட்சி அகாலிதளம்தான்.

அகாலிதளத்தவர் பஞ்சாபி மொழிவழி மாநிலம் வேண்டுமென்று கோருகின்றனர் இதற்காகக் கடந்த ஆண்டில் அவர்கள் மொழிவழி கோரிக்கைக்காகக் குரல் எழுப்புவதற்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து மகத்தானதோர் போராட்டம் நடத்தியிருக்கிருர்கள். ஐயாயிரத்திற்கும் அதிகமான அகாலியர் அப்போது கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை தரப்பட்டனர்.

இப்போது தங்கள் கோரிக்கைக்காக டில்லி சர்க்காருடன் வாதிடும், டில்லி கோரிக்கைக்கு இணங்க மறுத்துவிட்டிருக்கின்றனர்.

பேச்சுவார்த்தைகளின் முடிவில், 'நாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம்; பேச்சுக்கள் பலன்தரவில்லை; தொடர்ந்து பேசுவோம் என்பதற்கும் வாய்ப்பு இல்லை,' என்று அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் தெரிவித்திருக்கிருர்.

பண்டித பந்த், 'நான் இப்போது ஒன்றும் கூறுவதற்கில்லை,' என்று கூறினுராம்!

அகாலிதளப் பொதுக் குழுக் கூட்டம் மார்ச் 4-ந் தேதி அமிர்தசரசில் நடைபெறப் போகிறது என்றும், அதன் பிறகே அகாலியரின் அடுத்த நடவடிக்கை பற்றி திட்டமான முடிவு தெரியவரும் என்றும் கூறப்படுகிறது.

கடைசியாக வந்துள்ள டில்லி செய்திகள், பேச்சுவார்த்தைகள் முறியவில்லை என்றும், அகாலியர், இருமொழி மாநிலங்கள் அமைத்து, அங்கு 'மண்டல சபைகள்' அமைத்துக் கொள்வதற்குச் சம்மதித்தனர் என்றும், 'மண்டல சபை'களுக்கு விரிவான அதிகாரங்கள் வேண்டும் என அவர்கள் கோரியதைக் கூட டில்லி ஏற்றுக்கொண்டுவிட்டது என்றும், அடுத்து இரண்டொரு நாட்களில் பஞ்சாப் பற்றிய சர்க்காரின் முடிவு அகாலியருக்கு அறிவிக்கப்படும் என்றும் கூறுகின்றன

நீக்ரோவர் எழுச்சி...!

இன வெறியை எதிர்த்து அறப்போர்

நியூயார்க், பிப். 25—

அல்பாமாவில் இன வெறியை எதிர்த்து 'காந்திய முறை'யில் அறப்போர் புரிய அங்குள்ள அமெரிக்க நீக்ரோத் தலைவர்கள் திட்டமிட்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

ஒரு பஸ்ஸில் வெள்ளையருக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் உட்கார்ந்ததற்காக ஒரு நீக்ரோ பெண்ணுக்கு அபராதம் விதிக்கப்பட்டதை அடுத்து சென்ற 11 வாரமாக அல்பாமாவின் தலைநகரான மாண்ட்கோமரியில், நீக்ரோக்கள் பஸ்களில் ஏருது தங்கள் தொழிற்சாலைகளுக்கு நடந்தே செல்கின்றனர் பிரபல வக்கீல்களும், மத உபதேசியார்களும் கைது செய்யப்பட்டிருப்பதால் நீக்ரோக்கள் கொதிப்படைந்துள்ளனராம்.

நாடு முழுவதும் வேலை நிறுத்தம் செய்தல், பெரிய அளவில் உண்ணுநோன்பு மேற்கொள்ளல் ஆகியவைகள், அவர்கள் நடத்தவிருக்கும் அறப்போரில் அடக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கு வர விரும்புகிருராம்!

கோலாலம்பூர், பிப். 24—

இந்தியாவுக்கு நல்லெண்ண சுற்றுப்பயணம் செய்ய விரும்புவதாக மலேயா முதலமைச்சர் தெங்கு அப்துல்ரெஹ்மான் கூறியுள்ளார்.

'மலேயாவில் தற்போது பெரிய அரசியல் மாறுதல்கள் நிகழ்ந்து வருவதால், இன்னும் பல மாதங்கள் வரை இந்தியாவுக்குச் செல்வது என்பது இயலாததாகும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்,

காமராசரின் 'இரட்டை வேடம்'

'தட்சிணப் பிரதேசம் இல்லை' என்றுர் அறிக்கையில்-- ஆதரவு தேடச் சொல்கிருர் சுப்பிரமணியம் மூலம்!

மந்திரி சபைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டா?

மக்கள் கருத்தறிவித்த பின்னும் காமராசர் மௌனம் சாதிப்பது ஏன்?

(நமது அரசியல் நிருபர்)

'கேரளமும்-தமிழகமும் இணைந்து இரு மொழி மாநிலம்——தட்சிணப் பிரதேசம் அமைவது இரு மாநிலத்தவருக்கும் நல்லது—பயனுள்ளது' என்று பேசிவருகிருர், கடந்த சில நாட்களாகக் கனம் நிதி அமைச்சர் சுப்பிரமணியம்!

முதலமைச்சர் காமராசர், தனது மந்திரி சபையில் உள்ள ஒருவர் இப்படிப்பேசி வருவது குறித்து இதுவரை தனது கருத்து என்ன என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கக் காணோம்; வாய்மூடி மௌனியாகவே இருந்து வருகிருர்.

'பிப். 20—அர்த்தால் வேண்டாம்' என்று அறிக்கை விடுத்த காமராசர், 'தட்சிணப் பிரதேசத் திட்டத்திற்கு சர்க்கார் இணங்கவில்லை' என்பதாக ஜாடை காட்டினுர்.

'சர்க்கார் எந்த ஒரு இணைப்புத் திட்டத்திற்கும் கட்டுப்பட்டுவிடவில்லை; எந்த ஒரு இணைப்புத் திட்டத்தையும் எந்த சர்க்கார் மீதும், மக்கள் மீதும் திணிக்கும் நோக்கம் டில்லிக்கு இல்லை', என்று உறுதி கூறியிருந்தார்—அதே அறிக்கையில்!

ஆனுல், 'எப்போதாவது திட்டமான யோசனைகள் வெளிவருமானுல், அத்தகு இணைப்புத் திட்டத்தை ஏற்பதா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் சுதந்திரம் இந்த சர்க்காருக்கு இருக்கிறது' என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

இந்தப் 'பாதுகாப்பான' அறிக்கையைப் புகலிடமாகக் கொண்டோ என்னவோ, கனம் சுப்பிரமணியம், 'தட்சிணப் பிரதேசம்' குறித்து இப்போது தீவிரமாகப் பேசிவருவதையும், காமராசர் மௌனம் சாதிப்பதையும் பார்த்தால், காமராசர் இரட்டை வேடம் தாங்குவதாகவே தோன்றுகிறது.

மேலும் பிப். 20-க்கு முன் கனம் சுப்பிரமணியம். 'தட்சிணப் பிரதேசம் குறித்து சென்னை மந்திரி சபையில் பிளவு ஒன்றும் இல்லை' என்று பேசினுர். உண்மையில் மந்திரி சபையில் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்ருல், சுப்பிரமணியம் நடத்திவரும் 'தட்சிணப் பிரதேச ஆதரிப்புக் கூட்டங்கள்' மந்திரி சபையினுடையவும், அதனுல் காமராசருடையவும் கருத்துமாகிறது.

ஆகவே, 'தட்சிணப்பிரதேசம் ஏற்கப்படவில்லை,' என்று சாடைகாட்டிய காமராசர் அன்று தரித்த வேடம் வேறு; இன்று பூண்டிருக்கும் மௌன வேடம் வேருக இருக்கிறது. காமராசர் இரட்டை வேடம் தாங்கி நடத்தும் நாடகம் நீண்ட நாள் நீடிக்கமுடியாது என்பதை அவர் உணர்ந்தாகவேண்டும்.

தட்சிணப் பிரதேசம் பற்றி மக்கள் கருத்தறியாமல் எதுவும் செய்யமாட்டோம்' என்று பேசிய காமராசர், பிப். 20-ல் மக்கள் கருத்து அறிவித்த பின்னும் ஏன் மௌனம் சாதிக்கிருர்? இவரது மௌனமும் கனம் சுப்ரமணியத்தின் இடைவிடாத 'தட்சிணப் பிரதேச ஆதரிப்புப் பிரச்சாரமும், மக்களுக்கு ஏற்கனவே இது பற்றி உள்ள ஆழ்ந்த சந்தேகத்தை—'தட்சிணப் பிரதேச திட்டம் ஏற்கனவே சென்னை மந்திரி சபையால் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்ட முடிவே' என்ற சந்தேகத்தை வலுப்படுத்துவனவாக உள்ளன.

தஞ்சையிலும், சென்னையிலும் தட்சிணப் பிரதேசம்பற்றி சுப்பிரமணியம் தெரிவித்துள்ள கருத்துக்களில் புதியது எதும் இல்லை; எல்லாம் ஏற்கனவே தரப்பட்டவைதான்.

கேரளமும்—சென்னையும் இணையும் இரு மொழி மாநிலத்திற்குச் 'சென்னை' என்றே பெயர் வைத்துக்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்திருப்பதுகூட, இதுவரை யாரும் கூருதது அல்ல!

சாதி இந்துக்களின் மனமாற்றம்!

வடநாட்டு கிராமத்தில் நிகழ்ந்துள்ளதாக தகவல்

அகமதாபாத், பிப். 25—

அகமதாபாத் மாவட்டம் பிப்லாஜ் என்னும் கிராமத்தில் சுமார் 400 சாதி இந்துக்கள், தங்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மிடையில் இருந்த வேறுபாட்டை ஒழித்துவிட்டுத் தாழ்த்தப்பட்டவர்களுடன் தாங்களும் சமமாக இணைந்து வாழச் சம்மதம் தந்துவிட்டனராம்,

நேற்று அவர்கள் ஊர்வலமாகப்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 27-2-'56 திங்கள்

ஆங்கில இதழின் இழிகுணம்!

பிப்ரவரி இருபது பொது வேலைநிறுத்தமும், கடையடைப்பும், கூட்டணியினர் எதிர்பார்த்ததற்குக் கூடுதலாக முழு அளவில் வெற்றி பெற்று இருக்கிறது.

சென்னை நகரத்தில் மட்டுமே அல்லாது, தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் அனைத்திலும் வேலைநிறுத்தம் கணிசமாக நடைபெற்று இருக்கிறது.

பொதுவாக இந்த வெற்றி எதிர்பாராத ஒன்று. குறிப்பாக, சென்னை அரசாங்கம், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி, தேசிய தினசரிகள் ஆகிய அனைத்தும் வேலைநிறுத்தத்திற்கு இத்தகைய மகத்தான வெற்றி கிடைக்குமென்று அறவே எதிர்பார்க்கவில்லை

தனது வரைகடந்த அழிவு பலத்தைக்கொண்டு வேலைநிறுத்தத்தைச் சிதறடித்துவிட முடியுமென்ற நம்பிக்கையால் அரசாங்கம் செயல்படத் தொடங்கியது. வேலைநிறுத்தத்தை முறியடித்துவிடும்நோக்குடன் காங்கிரஸ் கட்சியும் முழு மூச்சுடன் முயன்றது. அரசாங்கத்தையும், காங்கிரசையும் தேசிய தினசரிகளும் வழக்கம்போல் வெட்கமின்றிப் பின்பற்றின.

அரசாங்கமும், அதிகாரபூர்வமான காங்கிரஸ் கட்சியும், தேசிய தினசரிகளும் எடுத்துக்கொண்ட மூர்க்கத்தனமான முயற்சிகள் அனைத்தையும் மீறி, பொது வேலைநிறுத்தம் வெற்றி பெற்றிருக்கிறது.

தங்கள் முயற்சியால் சீர்குலைந்துவிடாமல் பொது வேலைநிறுத்தம் முழு அளவில் வெற்றி பெற்றுவிடவே, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களின் மனநிலை பற்றிய ஆராய்ச்சியைச் செய்ய, தேசிய ஏடுகள் முன்வந்துள்ளன. தங்கள் இருட்டடிப்பையும் தாண்டிக்கொண்டு, வேலைநிறுத்தம் தமிழ்நாடு எங்கணும் நடைபெற்றுவிடவே, வேலைநிறுத்தத்தில்பங்குகொண்டவர்களின் மனப்பாங்கையே குறை சொல்லிவிட்டால், வேலைநிறுத்தத்தின் அடிப்படை கோட்பாடுகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவு இல்லை என நிலைநாட்டிவிடக்கூடும் என்று சில தேசிய ஏடுகள் தீர்மானித்துக் கொண்டு இருக்கின்றன.

இன்றும் ஆங்கிலேயரை ஆசிரியராகக் கொண்டு நடத்தப்பட்டு வருவதாகச் சொல்லப்படும் ஆங்கில தினசரியான 'மெயில்' இதழ், வேலை நிறுத்தத்தின்போது கடைகளை மூடிவிட்ட வியாபாரிகள், கொள்ளை அடிக்கப்படக்கூடும் என்ற அச்சத்தினாலேயே கடைகளை மூடினார்களே அல்லாது, வேலைநிறுத்தக் கோட்பாடுகளில் தங்களுக்குள்ள ஆதரவினால் அல்ல என்று எழுதி இருக்கிறது. விவாதத்திற்காக 'மெயில்' இதழின் வாதம் சரியானது என்றே ஒப்புக்கொள்வதானாலும், அதையே முழு உண்மை என எவரும் ஒப்புக்கொள்ளார்.

வியாபாரிகள் வியாபாரம் செய்வதற்காகத்தான் கடை வைத்திருக்கிறார்களே அல்லாது வெறும் கண்காட்சிகளுக்காக அவர்கள் கடை வைத்திருக்கவில்லை. பொது வேலை நிறுத்தத்தின் போது எதிர்பார்த்தபடி வியாபாரம் இருக்காது என்பதை, 'மெயில்' ஆசிரியரைக் காட்டிலும், வியாபாரிகள் நன்கு அறிவார்கள். ஒழுங்காக வியாபாரம் நடைபெறாத ஒரு நாளில் வீம்புக்குக் கடைகளைத் திறந்து வைக்க புத்தியுள்ள ஒரு வியாபாரியும் முன்வரமாட்டார். இந்தச் சாதாரண நியாயம் 'மெயில்' ஆசிரியரின் மூளையில் தோன்றாது போனதில் வியப்பொன்றுமில்லை.

'மெயில்' இதழின் நிர்வாக உண்மையை தெரிந்து கொண்டிருப்பவர்கள், அதன் இழிப்போக்கில் உள்ள இரகசியத்தை அறிந்தே இருக்கிறார்கள். ஏற்கனவே அவ்விதழ், ஆங்கில ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு இருந்தது. இப்பொழுதோ, வடிகட்டிய வகுப்புவாதிகளின் நலன்களைப் பாதுகாப்பதில் முனைந்திருக்கிறது.

இவ்விரண்டு மாறுதலுக்கும், நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றந்தான் காரணம். எதை எழுதினால் என்ன, ஊதியத்திற்குக் குறைவேற்படவா போகிறது?

தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள்மீது தமிழ் மக்களுக்குள்ள நியாயமான உரிமையை எடுத்துக்காட்டி, பொது வேலை நிறுத்தத்திற்குத் தமிழ் மக்களை ஒன்று திரட்ட ஏற்கனவே சென்னை நகரின் பல பகுதிகளிலும் நாள் தவறாமல் பொதுக் கூட்டங்கள் போடப்பட்டன. ஒவ்வொரு கூட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்கள்கூடி பொருளறிவு பெற்றனர்.

மற்ற இதழ்கள் போலவே, 'மெயில்' இதழும், இக்கூட்ட நிகழ்ச்சிகளுக்கு, அவைகளுக்குரித்தான முக்கியத்துவம கொடுத்து பிரசுரிக்காது இருந்துவிட்டது. செய்தி இதழ் என்ற முறையில், எதிர்க்கட்சியினரிடம் காட்டவேண்டிய ஒரு பொறுப்பான கடமையை, மற்ற தேசிய ஏடுகளைப் போலவே, ஆங்கில இதழான 'மெயில்' இதழும் சிறுமதி கொண்டு நிறைவேற்றத் தவறி இருக்கிறது.

ஆளும் கட்சியினரின் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போலவே, எதிர்க்கட்சியினர் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுவதில்தான் பத்திரிகை தர்மம அடங்கி இருக்கிறது. அதுவுமின்றி, எதிர்க் கட்சியினர் போக்கை அறிந்து, அவசியமானால் தங்களைத் திருத்திக் கொள்வதும், அப்பொழுதுதான் ஆட்சியாளர்களுக்குச் சாத்தியமாகும். இதைத்தான் ஜனநாயக மரபு என்பர் அரசியல் அரிச்சுவடி அறிந்தோர்.

ஆனால், 'மெயில்' இதழுக்கோ, பத்திரிகை தர்மத்தை வளர்ப்பதிலும் அக்கரை இல்லை; ஜனநாயக மரபை உருவாக்குவதிலும் கருத்தில்லை; காங்கிரஸ் ஏடுகளிலும் கடைகெட்ட ஏடாக நடந்துகொள்வதில் முனைந்திருக்கிறது.

'போலீஸ் பாதுகாப்புத் தருகிறோம்; கடைகளைத் திறந்து வையுங்கள்' என்று அரசாங்கம் அறிக்கை மூலம் வியாபாரிகளுக்கு அறிவித்திருக்கிறது; கடைகளைத் திறந்துவைக்கும்படி போலீஸ் அதிகாரிகளும், வேறு அரசாங்க அதிகாரிகளும், காங்கிரஸ் கட்சியினரும், சிற்சில இடங்களில் வியாபாரிகளை நேரடியாக அணுகி வேண்டி உள்ளனர். அப்படி இருந்தும் அவர்கள் கோரிக்கைக்கு இணங்கி கடைகளைத் திறந்துவைக்க வியாபாரிகள் ஒருப்படவில்லை. காரணம் என்ன?

போலீஸ் அதிகாரிகளிடத்திலும் மற்ற அதிகாரிகளிடத்திலும் தங்களுக்கு நம்பிக்கை இல்லாததினாலேயே, அவர்கள் கோரிக்கைக்கு இணங்க வியாபாரிகள் மறுத்துவிட்டனர் எனக் கூறுவது நியாயமாகுமா? ஆனால், 'மெயில்' இதழின் வாதப்படி, அதுவும் நியாயமென்றுதான் கொள்ள வேண்டும்!

கொள்கை பிடிப்பின் காரணமாகத்தான் பெரும்பான்மையான வியாபாரிகள் பிப்ரவரி இருபதில் கடையடைத்துள்ளார்கள். இந்த உண்மையை, 'மெயில்' இதழ் மூடி மறைத்தபோதிலும், அறிய வேண்டிய அரசாங்கம் அறிந்தே இருக்கிறது. இனியாவது இழிகுணத்தை 'மெயில்' இதழ் மறந்து நடந்துகொள்ளும் என எதிர்பார்க்கிறோம்.

அண்டை நாடுகளுடன் நேச உறவு

மாஸ்கோ, பிப். 24—

"அண்டை நாடுகளுடன் நேச உறவை வளர்ப்பதுடன் யூகோ. இந்தியா, பர்மா, ஆப்கனிஸ்தான், எகிப்து, சிரியா ஆகிய நாடுகளுடன் மேலும் நேசத்தை வளர்த்து உலக சமாதானத்திற்கு ரஷ்யா பாடுபட வேண்டும்" என்று சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் மாநாட்டுத் தீர்மானம் கூறுகிறது.

6000 சொற்களடங்கிய அத்தீர்மானம், குருஷ்சேவ் அம்மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் அத்தனையையும், இதர தலைவர்கள் கூறியவற்றையும் உள்ளடக்கியதாகவிருக்கிறது.

"அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, மேற்கு ஜெர்மன், ஜப்பான், ஈரான், துருக்கி, பாகிஸ்தான் நாடுகளுடன் ரஷ்யா தனது உறவுகளை சீர்திருத்திக்கொள்ள வேண்டும்" என்றும் தீர்மானம் கூறுகிறது.

உத்திர பிரதேச மாநிலத்தின் வரவு—செலவுத் திட்டத்தில் சுமார் ரூ 9 கோடி துண்டு விழுகிறதாம்!

வரவு ரூ. 85 85,59,500 என்றும், செலவு ரூ 94,91,09,600 என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

தமிழ்நாட்டில் அர்த்தால்

ஒரு தெளிவான படப்பிடிப்பு

"அமைதியான ரீதியில் அகிம்சா முறையில் அர்த்தாலின் பரிபூரண இலட்சணங்களுக்குப் பங்கம் வராமல் நடத்தும் ஆற்றல் பெற்றவர்கள் தமிழர்கள் என்பதை, இந்தியா உணரும்படி தமிழர்கள் செய்துவிட்டதில், காங்கிரஸ்காரர்கள் உட்பட எல்லோருக்கும் தனி மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

"அர்த்தால் பரிபூரண வெற்றி அடைந்துள்ளது என்பதில் இரண்டு அபிப்பிராயம் இருக்க முடியாது. தமிழ்நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பரிபூரண அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றிரண்டு இடங்களில் சில அசம்பாவிதங்கள் நீங்கலாகப் பொதுவாக அமைதி கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிறது.

"இந்தப் பொது அர்த்தால் வெற்றியில் சர்வ கட்சியினரை விடவும் சர்க்காரும், காங்கிரசும் நிச்சயமாகவும் பெருமை கொள்ள வேண்டும். உறுப்பு ராஜ்ய மந்திரிகள் முன்னிலையில் சென்னை ராஜ்ய மந்திரிகள் தலைநிமிர்ந்து பேசுவதற்கான கௌரவத்தை மக்கள் சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றனர்.

"சுதந்திரம் அடைந்தபின் இப்படி ஒரு பொது அர்த்தால் சென்னை ராஜ்யத்தில் வெற்றிகரமாக நடந்தது இதுதான் என்று நம்புகிறோம். யாருக்கும் எந்தவித நஷ்டமும், கஷ்டமும் ஏற்படாத ரீதியில் தமிழர்கள் தங்கள் ஏகோபித்த ஆட்சேபத்தைத் தெரிவிப்பதில் வெற்றி பெற்றுவிட்டனர்.

—இவ்வாறு, 23-2-56 'தின மலர்' இதழ் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியில் எழுதப்பட்டிருப்பதாவது :—

"தமிழ் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் தட்சிண ராஜ்யம் மீதுள்ள தங்கள் ஆட்சேபங்களை சந்தேகத்திற்கிடமின்றி தெரிவித்துவிட்டனர்.

"இந்தபொது அர்த்தாலில் காங்கிரசைத் தவிர எல்லாக் கட்சிகளும் பங்கு கொண்டன. பொது விவகாரத்தின் மீது இங்ஙனம் சர்வகட்சி கூட்டுகள் ஏற்படுவது வரவேற்கக் கூடியதாகும். காங்கிரஸ் கொஞ்சங்கூடச் சிந்தித்து செயலாற்றி யிருக்குமானால், இந்த அர்த்தாலின்போது வீணாக சர்வ கட்சியோடு முட்டவேண்டி வந்திருக்காது. காங்கிரஸ் நடுநிலைமை வகித்திருந்தாலும் காங்கிரசை யாரும் குறை கூறியிருக்கமாட்டார்கள்.

"பொதுப் பிரச்சினைமீது சென்னை சர்க்கார் கொண்டுள்ள அபிப்பிராயம் சர்வ கட்சிகளுக்கு எதிரிடையானதல்ல.

"தட்சிண ராஜ்யம் வேண்டாம் என்றுதான் காமராசரும் அபிப்பிராயப்படுகிறார்! வெளிப்படையாகக் கூறமுடியாத ஒரு ஸ்தானத்திலிருப்பதால்தான் அவருக்கு எதையும் பகிரங்கமாகக் கூற முடியவில்லை.

"தேவிகுளம் - பீர்மேடு, இதர தமிழ்ப்பகுதிகள்வேண்டுமென்று சர்வகட்சிகள் கோருவதில் காமராசரின் தலைமையிலுள்ள சென்னை சர்க்கார் எதிராக இருக்கமுடியாது.

சென்னையை தமிழ் நாடு என்று பெயர் மாற்ற மக்கள் விரும்பினால் அதற்கும் சர்க்காரால் குறுக்கே நிற்க முடியாது.

சர்வ கட்சியினரின் குறிக்கோளும், தமிழ்நாடு காங்கிரசின் குறிக்கோளும் ஒன்றுதான்."

சட்டசபை முன் அறப்போர்!

வரும் மார்ச் திங்களில் பம்பாய் சட்டசபையில் மாநில புது அமைப்புக் குறித்த விவாதம் நடைபெறும் போது சட்டசபைக் கட்டிடத்தின் முன்பாக 'அறப்போர்' செய்வது என்று சம்யுக்த மராட்டிய சமிதி முடிவு செய்திருக்கிறது.

நல்ல நியாயம்! நல்ல கட்சி!!

புதுடில்லி, பிப். 24—

'பம்பாய் மராட்டியருக்குத்தான்' என்று வாதாடிய 'குற்றத்'திற்காக பம்பாய் உதவி மந்திரி டாக்டர் டி ஆர். நரவனே என்பாரை, 'காங்கிரசில் ஒரு சாதாரண உறுப்பினராகக்கூட இருக்கக் கூடாது' என்று கூறி, காங்கிரஸ் மேலிடம் அவரை வெளியேற்றிவிட்டதாம்.

குடியரசுத் தலைவரின் 'அரிய யோசனை!'

பாட்னா, பிப். 24—

இந்தி வழங்காத பகுதிகளில் இந்தியை சுலபமாக மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு குடியரசுத் தலைவர் அரிய யோசனை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

இதர மொழிகளில் உள்ள நல்ல புத்தகங்களை இந்தியில் மொழி பெயர்க்கவேண்டுமாம்!

இந்தியில் உள்ள நல்ல புத்தகங்களை இதர மொழிகளில் மொழி பெயர்க்கவேண்டுமாம்!

கிழக்கத்திய கப்பல் கழகம்

சர்க்கார் மேற்கொள்ளும்

புதுடில்லி, பிப். 24—

தற்போது சர்க்காருக்கும் — தனிப்பட்ட முதலாளிகளுக்கும் கூட்டு உடமையாகவிருக்கும் 'ஈஸ்டர்ன் ஷிப்பிங் கார்ப்பொரேஷன்' என்ற கிழக்கத்திய கப்பல் கழகத்தின் மூலதனம், நிர்வாகம் முழுவதையும் இந்திய சர்க்காரே நேரடியாக மேற்கொள்ளுவதென திட்டமிட்டிருக்கிறார்கள்.

செங்கடல் பாரசீகக் குடா, ஹாஜ் போக்குவரத்திற்கென சீக்கிரம் சர்க்கார் 2-வது கப்பல் கழகம் ஒன்றை நிறுவவும் திட்டமிட்டிருக்கிறது.

இந்தத் தகவலை போக்குவரத்து துணை அமைச்சர் ஒ. வி. அழகேசன் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் என்னவோ!

புதுடில்லி, பிப். 23—

இரயில்வே நிலையங்களில் முக்கியமாக மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறைகளில் செய்திப் படங்களைத் திரையிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்!

இரயில் ஓடிக்கொண்டிருக்கும்போது சினிமா பார்க்க வசதி செய்வதற்காக உணவு— சினிமா இரயில் பெட்டியொன்றை அமைத்து அனுப்ப உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்!

வாக்கெடுப்பு சாத்தியமே என்கிறார் நேரு

'வேண்டாம்' என்ற வேண்டுகோளும் 'கூடாது' என்ற கூச்சலும்

எழுப்பியோருக்குத் தமிழர் தந்த பதில்

தமிழகம் கண்டறியாத பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு கடந்த பிப். 20-ல் நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்புக்குரிய அந்த மகத்தான சம்பவம், தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் நடைபெற்றுள்ள விபரங்கள் நமக்குக் கிடைத்தவண்ணமுள்ளன ; அவற்றினை முடிந்தவரையில் சுருக்கித் தந்து வருகிறோம்.

சிறு சிறு கிராமங்களில்கூட விவசாயிகள் எல்லாம் வேலைக்குச் செல்லாதிருந்திருக்கின்றனர் ; அறுவடைகூட அன்று பல ஊர்களில் நடைபெறவில்லை.

பொங்கிவழிந்த ஆர்வத்தோடு, பிப். 20—பொது வேலை நிறுத்தம் நடைபெற்றிருப்பதை இந்த நிகழ்ச்சிச் சுருக்கங்கள் சொல்லுகின்றன.

சென்னை—பெரம்பூர்

பொதுவேலை நிறுத்தமும் கடையடைப்பும் வெற்றிகரமாக நடைபெற்றது. பள்ளி மாணவர்களில் பெரும்பான்மையினர் பள்ளிக்குச் செல்லவில்லை 'சிம்சன் குரூப்'பைச் சேர்ந்த 'இண்டியா பிஸ்டன்' தொழிலாளர்களும். இரயில்வே தொழிலாளர்கள் சிலரும் வேலைக்குச் செல்லவில்லை. ஆர். பி. சி சி. உபாதிலைப் பள்ளி முன் தோழர்கள் தி மு. ஆறுமுகம், எம் பி கபிலன், பாலசுந்தரம், தூயமணி ஆகியோரை கைது செய்து போலீஸ் நிலையத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் பின்னர் விடுவித்தனர்.

பல்லாவரம்

கடைகளனைத்தும் மூடப்பட்டன. தோல் பதனிடும் தொழிற்சாலையான 'கார்டன் உட்ராப்' தொழிலகம் மூடப்பட்டது சென்னை நகர சபைக்குச் சொந்தமான கல்லுடைக்கும் 'குவாரி' தனிப்பட்டோரது 'குவாரி'கள் வேலைநிறுத்தம் செய்தன. மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லாததால் பள்ளிகள் சரிவர நடைபெற முடியவில்லை. காலை 8 மணி முதல் 12 மணிவரை கூட்டணியின ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியே சென்றது.

தாம்பரம்

எல்லா வியாபாரிகளும், கம்பெனித் தொழிலாளர்களும அர்த்தால் செய்தனர். மாலை 3 மணிக்கு, வியாபாரிகள், தொழிலாளர்கள், பொதுமக்களடங்கிய மாபெரும் ஊர்வலம் கிழக்கு தாம்பரம், கடபெரி வழியாக சென்று துரைசாமி (ரெட்டியார்) மார்க்கெட் மைதானத்தில் வந்தடைந்து, உறுதி மொழியை எடுத்துக் கொள்ளப் பட்ட பின், கூட்டம் கலைந்தது.

சித்தூர்

இப்பகுதியில் இதுவரையில் நடைபெற்றிராத அளவில் அர்த்தால் நடைபெற்றது; போக்குவரத்து சாதனங்கள் அத்தனையும் நின்று, உணவு, சிற்றுண்டி, தேநீர் கடைகள் முதற்கொண்டு எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டிருந்தது. எந்த நிலைமையிலும் மூடாமலிருக்கும் காய்கறி மார்க்கெட்டுகள் அன்று முழுமையும் மூடப்பட்டிருந்தது நெல், மாவு அரைக்கும் ஆலைகள், அச்சகங்கள், சினிமாக்கள் யாவும் மூடிக்கிடந்தன.

அன்று காலை 9 மணியளவில், பல பிரமுகர்கள் முன்னிலையில் 3,000 மக்கள் அடங்கிய மாபெரும் ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளின் வழியாய் வந்து, மாலை 3 மணிக்கு, நிலையத்தை அடைந்தது; அங்கு தமிழரின் உறுதி மொழியை மக்கள் ஏற்றுக்கொண்டனர்.

குறிப்பு: அர்த்தாலில், ஆந்திரத் தோழர்களும் கலந்துகொண்டு பணியாற்றியது மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஆலந்தூர்

அர்த்தால், ஊர்வலம் முழு வெற்றியுடனும் அமைதியான முறையிலும் நடைபெற்றது.

பரங்கிமலை, கத்திப்பாரா, ஆதம்பாக்கம், ஆலந்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள பெரும் தொழிற்சாலைகள், கர்சன் வான்பட்டரை, அலுமினிய தொழிற்சாலைகள், கைத்தறி நிறுவனங்கள், சினிமா கொட்டகைகள், பாங்கிகள், தேநீர் விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள், பல சரக்குக் கடைகள் ஆகியவை அர்த்தாவில் கலந்துகொண்டதுடன், பொது வேலைநிறுத்தம் அமைதியாக நடைபெற பொதுமக்கள் ஆதரவு தந்தனர்.

ஆயிரக்கணக்கில் வியாபாரம் ஆகும் முத்துகுமாரசாமி நாயக்கர் சாலை, அன்று முழுமையும் சூனியமாகக் காட்சி தந்தது. எல்லாப் பள்ளிகளும் வெறிச்சோடிக் கிடந்தன.

மாலை நடந்த ஊர்வலத்தில், பெருத்த அளவில் வணிகர்களும், தொழிலாளர்களும் ஒற்றுமையுடன் கலந்துகொண்டனர். என்றுமே இதுபோல் நடந்திராத அர்த்தாலும் - ஊர்வலமும் கண்டு ஆலந்தூர் முழுவதும் அதிசயத்தில் ஆழ்ந்தது.

செங்கற்பட்டு

எல்லாக் கடைகளும், சில பள்ளிகளும் மூடப்பட்டன. இவ்வூர் காங்கிரஸ்காரர்களும், நகர சபைத் தலைவரும் 'கடையடைப்பு செய்யவேண்டாம்' என்று துண்டு அறிக்கைகளும், நேரிலும் வந்து சொல்லியும் வியாபாரப் பொதுமக்கள் கடையடைப்பு செய்தனர்.

அன்று காலை 9 மணிக்கு மணிக்கூண்டிலிருந்து தோழர் சி. ஆர். நரசிம்மன் தலைமையில் புறப்பட்ட மாபெரும் ஊர்வலத்திலும் பெருவாரியான வியாபாரிகளும், பொதுமக்களும், மாணவர்களும் கலந்துகொண்டார்கள். ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக கண்டன ஒலிகளை முழக்கிக்கொண்டு சென்று அமைதியாகவும், கட்டுப்பாடோடும் 1 மணிக்கு மணிக்கூண்டு வந்தடைந்தது.

மாலை 6 மணிக்கு, ஆஞ்சநேயர் கோவில் மைதானத்தில் தோழர் சி. ஆர். நரசிம்மன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. வேணு, அசீஸ், தனசேகரன், சின்னையா, சிவம், வாகித், பலராமன் ஆகியோர் பேசியபின், உறுதிமொழி படிக்கப்பட்டு கூட்டம் 9 அளவில் முடிவடைந்தது.

பொன்னேரி

பஸ்கள் சரிவர ஓடவில்லை; ஆரம்பப்பள்ளி, உயர்தரப்பள்ளிகளில் 100-க்கு 25 சதவிகிதமே மாணவர்கள் சென்றனர். ஊராண்மைக் கழகத் தலைவர் கடையடைப்பு செய்யக்கூடாதென அறிக்கை வெளியிட்டும்கூட, வியாபாரிகள் கடைகளைத் திறக்கவில்லை. அமைதியாக அர்த்தால் நடைபெற்றது.

மீஞ்சூர்

காலை 7-30 மணிக்கு ஊர்வலம் சி. எம். சாமி விறகுத் தொட்டியில் ஆரம்பித்து, முக்கிய தெருக்களின் வழியாக வந்து காலை 9-30 மணிக்கு முடிவடைந்தது. மாலை 5 மணியளவில் கடைவீதி அருகில், தோழர் சி. எம். சாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் காதம், டி. இராமசாமி, மு. க. ஏழுமலை, இரா. சண்முகம், குப்புசாமி ஆகியோர் பேசினர்.

காங்கிரஸ்காரர்களின் 3 தையற் கடைகள் மூடப்படவில்லை. சுமார் 150 கடைகள் அத்தனையும் அடைத்துக்கிடந்தன. கடைகளைத் திறக்கும்படி சர்க்காரால் தண்டோரா போடப்பட்டது. போலீஸ் அதிகாரிகளும், பல காங்கிரஸ்காரர்களும், வியாபாரிகளை அணுகி கடைகளைத் திறக்கும்படி மிரட்டினர் ; ஆனால், வியாபாரிகள் எவரும் கடைகளைத் திறக்கவில்லை அர்த்தாலும், ஊர்வலமும் அமைதியாக நடைபெற்றது.

ஆனகாபுத்தூர்

காலை 8 மணியளவில், தொழிலாளர்களும், வியாபாரிகளும், தொண்டர்களும் கொண்ட ஊர்வலம் புறப்பட்டுச் சென்றது ; வியாபாரிகள் எல்லாக் கடைகளையும் அடைத்து, அர்த்தாலில் கலந்துகொண்டனர். பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. நெசவு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இறுதி நேரத்தில் சில காங்கிரஸ்காரர்கள், அர்த்தாலை முறியடிக்க முயற்சி செய்தார்கள் ; ஆனால், அர்த்தால் எதிர்பார்த்ததைவிட வெற்றிகரமாக நடைபெற்றது. ஊர்வலத்திற்குப் பின்னர் தி. மு. கழக கட்டிடத்திற்கு எதிரில் தோழர் சி இராமலிங்கம் தலைமையில், பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஆர். புரட்சிமணி, டி. சண்முகம், எம். ஆறுமுகம் ஆகியோர் அர்த்தால் பற்றி பேசியபின் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப் பட்டது.

மேட்டூர் அணை

வெற்றிகரமாகப் பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது. வியாபாரிகள் எல்லாக் கடைகளையும் (காங்கிரஸ் உட்பட) அடைத்து விட்டனர் ; டவுன் பஸ், சர்வீஸ் பஸ்கள் நின்றுவிட்டன ; அன்று பள்ளி இருந்தும் மாணவர்கள் பலர் செல்லவில்லை; பல குமாஸ்தாக்கள் சர்க்கார் (எச். இ. டி.) அலுவலகத்திற்குச் செல்லவில்லை; கெமிக்கல் தொழிற்சாலை, ஒர்க் ஷாப் போன்றவைகளில் 19-ந் தேதியே எல்லாத் தொழிலாளர்களையும் வெளியே அனுப்பாமல் உள்ளேயே கம்பெனி செலவில் அவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்து 20-ந் தேதியன்று வேலையை நடத்தினர்.

பொதுமக்கள் யாவரும் அமைதியான முறையில் நடந்துகொண்ட போதிலும் 11 தோழர்கள் கைது செய்து, 4 பேர்களை மறியல் செய்ததாக ரிமாண்டிலும், மற்ற 7 பேர்களை போக்குவரத்து இடைஞ்சல் செய்ததாக 20-ல் கோர்ட்டில் ஆஜர் செய்து தலா ரூ 10 அபராதம் விதித்தனர்.

அன்று மாலை மேட்டூர் பொது ஜன சேவா சங்க மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் அ. பாலு தலைமையில் நடைபெற்றது தோழர் பழனிசாமி உறுதி மொழி — வாசிக்க மக்கள் மேற்கொண்டனர்.

காரைக்கால்

சகரிலுள்ள கடைகள் அனைத்தும் மூடிக் கிடந்தன. இதற்கு முன்பு நடைபெற்றிராத வகையில் பெரிய கடைகளிலிருந்து சில்லரைக் கடைகள்வரை கடையடைப்புச் செய்தன.

மாணவர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர் சினிமாக் கொட்டகைகள் மூன்றிலும் காட்சிகள் கிடையாது. மாலை 6 மணிக்கு முருகையா நாடார் திடலில் பொதுக்கூட்டம் தோழர் அ. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தி. கோபால கிருட்டிணன், வீ. சின்னப்பா, ஆந்திரே அருள், கோ. பாஸ்கரன், கிசே, அபுஅனீபா, மா. சுப்பிரமணியன் ஆகியோர் பேசியபின், தோழர் அம்பிகாசுந்தரமூர்த்தி கூட்டணியின் உறுதி மொழியை வாசித்தார்.

திருமழிசை

கடையடைப்பும், வேலை நிறுத்தமும் முழுவெற்றியோடு நடைபெற்றது. 19-ந் தேதி இரவே செயலாளர் தோழர் சி. இராசன், பொதுக்குழு உறுப்பினர் தோழர் டி. கே. போரூரான் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

20-ந் தேதி காலை 7-30 மணிக்கு தேசிய வாலிபர் சங்கம், சோஷலிஸ்டு, தி மு க ஆகிய தோழர்கள் ஊர்வலம் நடத்தினர்.

இவ்வூரில் உள்ள எல்லா நெசவுத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். பாவு போடுவதும் அறவே நின்று, இவ்வூர் அமைதியாக இருந்தது. இவ்வூரிலிருக்கும் 12 நெல் அரைக்கும் ஆலைகளும் வேலை செய்யவில்லை. ஓட்டல்களும், கடைகளும் மூடிக் கிடந்தன. கைது செய்யப்பட்ட தோழர்கள் 20-ந் தேதி இரவு விடுதலை செய்யப்பட்டனர்.

போளூர்

எல்லா கடைகளும் மூடப்பட்டன; பஸ்கள்—லாரிகள் ஒன்றுகூட ஓடவில்லை; சினிமா நடைபெறவில்லை; டீ, காப்பி, பீடி, சிகரெட் கடைகளும் திறக்கப்படவில்லை.

மாலை 4 மணிக்கு சர்வகட்சி ஊர்வலம் பல தெருக்கள் வழியாக வந்து பழைய பஸ் நிலையத்தில் உறுதிமொழி எடுக்கப்பட்டது. ஊர்வலத்திலும், கூட்டத்திலும் சர்வகட்சிக் கூட்டணித் தலைவர் சின்னப்பையன் தலைமை தாங்கினார்.

சாத்தான்குளம்

ஒருசில கடைகளைத் தவிர அத்தனை கடைகளும் அடைக்கப்பட்டன. காங்கிரஸ்காரர்களும், திராவிட கழகத் தோழர்களும எல்லாக் கடைகளையும் திறக்கச் சொன்னார்கள் ; யாரும் கடைகளைத் திறக்கவில்லை மாலை 5½ மணிக்கு வாசகசாலை முன்பிருந்து மாபெரும் ஊர்வலம் ஆரம்பித்து முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று காந்தி மைதானத்தை அடைந்தது; தோழர் வெ. ஞானமுத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். பின்னர், உறுதிமொழி வாசித்து ஏற்றுக்கொள்ளப்பட்டு கூட்டம் கலைந்தது.

சேரன்மாதேவி

பொது வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டன ; சில பஸ்களும் நிறுத்தப்பட்டன; சினிமா காட்சிகளும் நடைபெறவில்லை காங்கிரஸ் பிரமுகர்கள் எவ்வளவோ பிரச்சாரம் செய்தும், கேட்டுக்கொண்டும்கூட வியாபாரிகள் கட்டுப்படாது கடையடைப்பு செய்தார்கள். பிற்பகல் ஓர் ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று பொது இடத்தில் முடிவுற்றது அங்கு உறுதிமொழிகள் வாசிக்கப்பட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பாலக்கோடு

பொதுவேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. அன்று வாரச் சந்தை-நாளாக இருந்தும் ஒரு ஆள்கூட சந்தைக்குவரவில்லை. உள்ளூர் காங்கிரஸ் பிரமுகர்கள் கட்டாயம் கடை திறப்பதாக முடிவு செய்தும் காங்கிரஸ்காரர்களுடைய கடைகள் மூடப்பட்டுவிட்டன. உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் மாணவர்களைக் கடுமையாக எச்சரித்தும் மாணவர்களில் 10 சதவிகிதம் பள்ளிக்குச் சென்றனர். அன்றைய வேலை நிறுத்தத்தில் பெத்தம்பட்டி தி. மு. கழகத் தோழர்களும், கம்மாளப் பட்டி [illegible] மு. கழகத் தோழர்களும் பாலக்கோட்டில் கலந்துகொண்டனர்.

குறிப்பு:— தி மு கழகச் செயலாளர் மாணிக்கம், உறுப்பினர்கள் சலீம், மாரியப்பன், தோழர் இளகீர் ஆகிய நால்வரையும் போலீசார் கைது செய்து உடனே விட்டுவிட்டனர்.

விருதுநகர்

இங்கு பொதுவேலை நிறுத்தத்தை டவுன் காங்கிரஸ் கமிட்டி, இளைஞர் காங்கிரஸ் ஆகியவைகள் எதிர்தபொழுதும் பொதுவேலை நிறுத்தம் அமைதியாக நடைபெற்றது. மாலை 8-மணிக்கு இரயில்வே நிலையத்திலிருந்து கல்லூரி மாணவர்கள், வியாபாரிகள், பொதுமக்கள், தொழிலாளர்கள் அடங்கிய ஊர்வலம் தோழர்கள் வா. அ. சங்கரபாண்டியன், எஸ். உலகநாதன் ஆகியோரின் தலைமையில் நகர முக்கிய வீதிகளில் வந்து, அம்மன் கோவில் பொட்டலில் உறுதி மொழியை எடுத்துக் கொண்டது.

உடுமலைப்பேட்டை

கடையடைப்பும், பொது வேலை நிறுத்தமும் வெற்றிகரமாக நடைபெற்றது; வாரச் சந்தை நடைபெறவில்லை; மில்களில் வேலை நடைபெறவில்லை; நகர் முழுதும் கடைகள் அடைக்கப்பட்டன; 93 பேர் கைது செய்யப்பட்டனர்; நகரெங்கும் சாவமைதி நிலவியது.

பிற்பகல் 1 மணிக்கு மேல் பொதுமக்களும் மாணவர்களும் திரண்டிருந்த கூட்டத்தினர் மீது மலபார் ஸ்பெஷல் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

மாலை 5 மணிக்குப் பிரேவோ திடலிருந்து 3,000 பேர்களுக்கு மேற்பட்ட பெரும் ஊர்வலம் நடைபெற்று உறுதிமொழி வாசிக்கப் பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் உடுமலை வட்டாரத்தில் மொத்தம் வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்கள் 98 பேர்; மற்றவர்கள் இரவே விடுதலை செய்யப்பட்டனர். கணியூரைச் சார்ந்த 47 பேர்களுக்கு 6 நாட்களுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. மற்றவர்களுக்கு 24—2—56 அன்று வழக்கு நடைபெறும்.

கைது செய்யப்பட்டோர் விவரம்:—தி மு. கழகம் 115; சோஷலிஸ்டு 10; பி. சோ. 5; சுயேச்சை 1; கணியூர் கம்யூனிஸ்டு அனுதாபிகள் 15.

வழக்குப் பதிவு செய்யப்பட்டோர்:—தி.மு. கழகம் 67; சோஷலிஸ்டு 10; பி. சோ. 5; சுயே 1; கணியூர் கம் 15.

ஆவல்சூரன்பட்டி

இவ்வூரில் பூரண அர்த்தால் நடைபெற்றது. எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டன. பள்ளிக்குப் பிள்ளைகள் செல்லவில்லை. விவசாயிகளும், கூலிகளும் தி. மு. கழகத்தினருடன் சேர்ந்து வேலைக்குச் செல்லவில்லை.

மாலை 6-30 மணிக்கு அமைதியான முறையில் தி. மு. கழகத் தோழர்களும், அனுதாபிகளும் ஊர்வலம் ஒன்றை சிறப்பான முறையில் நடத்தினர். ஊர்வலத்தில் சிறப்பாக மாணவர்கள் பங்கேற்றனர்.

வலியுறுத்துமா சென்னை அரசாங்கம்?

இந்தி வெறியர்களுக்குக் குடியரசுத் தலைவர் தூபம்

இந்தியை பரப்புவது அவசியமாம்

வடவர் தென்னாட்டு மொழியைக் கற்க வேண்டுமாம்

இந்தி வெறியர்களுக்குத் தூபமிடும் வகையில் குடியரசுத் தலைவர் பாட்னாவில் பேசியிருக்கிறார்.

பிகார் 'ராஷ்டிர பாஷா பரிஷத்' ஆண்டு விழாவில் பேசிய அவர், இந்தி வெறியர்கள் முதுகில்தட்டிக் கொடுத்திருக்கிறார்.

"இந்தியைப் பரப்புவதும், இந்தி இலக்கியத்தை வளமாக்குவதும் மிக அவசியமானதாகும்" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'இல்லாவிட்டால்...!'—மேலும் கூறுகிறார் அவர், 'இந்தி மொழிக்கு அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கும் இடத்தை இந்தி பெறுவது உண்மையில் நடைபெறாமல் போய் விடும்'—என்று!

இதற்காக என்ன செய்யவேண்டும்?

அவர் தெரிவிக்கிறார்—வடநாட்டவர் தென்னாட்டு மொழிகளுள் ஒன்றைக் கற்கவேண்டுமாம்!

வடநாட்டு மக்கள் எல்லோரும் அல்லவாம்! இந்தி பண்டிதர்கள் இருக்கிறார்களே, அவர்களேனும், வேறு ஏதாவது ஒரு இந்திய மொழியில் நல்ல அறிவு பெற்றிருக்கவேண்டுவது விரும்பத் தக்கது என்பது மட்டுமில்லாது அவசியமானதாகவும் கருதப்பட வேண்டுமாம்.

'வேறு இந்திய மொழிகள் என்பதில், தென்னாட்டு மொழிகளுக்குத்தான் நான் முதலிடம் கொடுப்பேன்; ஏனெனில், தென்னாட்டு மொழிகள் பல வழிகளாலும், இந்தியிருந்து வேறுபட்டவையாகும்' என்ற உண்மையையும் ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார் குடியரசுத் தலைவர்.

'வட நாட்டுப் பல்கலைக் கழகங்களில் விருப்பப் பாடமாக, தென்னாட்டு மொழிகளைக் கற்கவேண்டும்' என்றும் அவர் கூறினாராம்.

15 போலீஸ் அதிகாரிகள் கைது!

192 குடியானவர்கள் இறந்ததின் எதிரொலி

காரம், பிப். 26—

குடான் பிரதம நீதிபதி இரண்டு போலீஸ் அதிகாரிகளையும், 13 போலீசாரையும் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

இந்தப் போலீஸ் அதிகாரிகள் சென்ற வாரத்தில், கோண்டி என்னுமிடத்தில் கைது செய்யப்பட்ட 192 குடியானவர்களை ஒரு சிறிய அறையில் ஒன்றாக அடைத்து, மூச்சுத் திணறச் செய்து அவர்களுக்கு மரணத்தை உண்டுபண்ணிவிட்டார்களாம்.

கவனக் குறைவுடன் இருந்த மேற்கூறிய குடியானவர்களுக்கு மரணத்தை உண்டுபண்ணியதாகப் போலீசார்மீது வழக்குத் தொடரப்படுமாம்.

மேனாட்டுக் கல்வி முறையும் பெண்களும்

"பெண் கல்வித்துறையில் கடந்த ஐம்பதாண்டுக் காலமாக கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. முன்காலத்து நீதி நூலார், பெண்களுக்கென சுதந்திரமான தகுதியை அளிக்காத நிலையில், இன்று பெரும்பாலும் மேல்நாட்டுக் கல்வி முறையின் காரணமாக, தாங்களும் மதிக்கப்பட வேண்டியவர்களென ஒவ்வொருவரும் எண்ணுகின்றனர். வாக்குரிமை பெற்றிருப்பதினால், சமுதாயத்துறையில் மட்டுமே அல்லாமல் அரசியல் துறையிலும் பொருட்படுத்தத் தகுந்த ஒரு சக்தியாகப் பெண்கள் உள்ளனர். எதிர்காலத்தில் ஆண்களுடன் வாழ்க்கையில் எந்த ஒரு அந்தஸ்தைப் பெற பெண்கள் விழைந்தாலும் அதைத் தடுக்கக்கூடியது ஒன்றுமில்லை"

இவ்வாறு, எதிராஜ் பெண் கல்லூரி நாளில் பேசிய, சென்னை சட்டசபைத் தலைவர் கோபாலமேனன் குறிப்பிட்டார்.

கேட்டீரா, சேதி!

புதுடில்லி, பிப். 23—

இரயில்வேக்களில் தற்போதுள்ள மூன்றாம் வகுப்பை ஒழித்துவிட்டு அதற்கு இரண்டாம் வகுப்பு என்று பெயர் வைத்து, பிரத்தியேகமான இரண்டொரு பெட்டிகளில் தூங்குவதற்கு வசதி செய்து கொடுக்கப்படுமாம்!

'வகுப்பு வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும்' என்னும் நோக்கத்துக்கேற்ப இந்த மாறுதல் செய்யப்படுகிறதாம்.

இரண்டு மாதங்களில்!

2,557 மதுவிலக்கு வழக்குகள்

வேலூர், பிப். 23—

இன்று நடைபெற்ற மாவட்ட மதுவிலக்கு ஆலோசனைக் 'கவுன்சில்' கூட்டத்தில், 1955 டிசம்பரிலும், 1956 ஜனவரியிலும் வட-ஆர்க்காடு மாவட்டத்தில் 2,555 பேர் சம்பந்தப்பட்ட 2,557 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

37 ஆண்டுகளுக்குப் பிறகு மூடப்படுகிறது!

காந்தியார் துவக்கிய 'அரிசன்' இதழின் இறுதிக் கட்டம்!

ஆமதாபாத், பிப். 26—

'அரிசன்' இதழின் கடைசி இதழ் இன்று வெளியிடப்படுகிறது; காந்தியாரால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பத்திரிகை 37 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மூடப்படுகிறது. சந்தாதாரர்கள் வரவரக் குறைவதும், அதனால் ஏற்படும் நஷ்டமுமே இதை மூடுவதற்குக் காரணம்.

இன்றைய தலையங்கத்தில் இவ்விதழின் முழு வரலாறும் வரையப்பட்டிருக்கிறது.

"சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்த வேகம் இப்போது இல்லை; கட்டை மாட்டுவண்டியின் வேகத்தில், நிர்மாண வேலைகளைப் பற்றித்தான் இப்போது எழுத முடியும். காந்தியார் இல்லாமல் இந்தக் காரியத்தைச் செய்வது கடினம். காந்தியார் இறப்பதற்கு முன்பே இலட்சியங்கள், கருத்துக்கள் முதலியவற்றில் சில சமயங்களில் வேறுபாடுகள் தோன்றவாரம்பித்தன; அவருக்குப் பிறகு அது வெளிப்படையாக இருக்கிறது,' என்று அந்தத் தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஜாதி இந்துக்களின்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

புறப்பட்டு, தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் 'காலனி'க்குச் சென்று அங்குள்ள மக்களை அழைத்து, தங்கள் உபயோகத்தில் உள்ள கிராமக் கிணறுகளில் நீர் மொள்ள வருமாறு கூறியுள்ளனர்

தாழ்த்தப்பட்டவர்களுக்கு சமூகத்தில் உரிய இடத்தைத் தர, அந்த கிராம மக்கள் முன்வந்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

கழகக் கூட்டம்

★

மேல்பட்டாம்பாக்கம்:
29—2—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
என். வேலாயுதன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ச. இராசகோபாலன்

திருமணம்

29—2—56-ல் காஞ்சீபுரம், விளக்கடி வீதி, எண் 6 இல்லத்தில், தோழர் கா. வே. முருகேசன்—தோழியர் எல்லம்மாள் திருமணம் நகரமன்றத் தலைவர் திரு. பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெறும். அண்ணா அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்.

சேலம் மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் சங்கம்

29-2-56 பிற்பகல் 3 மணிக்கு, மாவட்ட போர்டு போக்ஸ் மண்டபத்தில், மேற்படி சங்கத்தை மீண்டும் அமைக்கவும், ஏற்பாடுகளைச் செய்யவும் கூட்டம் நடைபெறும்.

தென்னிந்திய சித்தவைத்திய சங்கம்

29—2—56 மாலை 6 மணிக்கு, சென்னை—தியாகராயர்நகர், இராகவையா வீதி, எண் 10, சங்க இல்லத்தில், மேற்படி சங்கக் கூட்டம் நடைபெறும்.

புயல் நிவாரண நிதி

செல்லப்பம்பட்டி (சேலம்) பஞ்சாயத்து மன்றத் தலைவர் திரு. சி. காத்தமுத்து அவர்கள், புயல் நிவாரண நிதிக்காக தோழர் க. அன்பழகன் அவர்களிடம் அளித்த ரூ. 200-ம் 9—2—56-ல் வரப்பெற்றோம்—நன்றி.

* * *

தமிழகப் புயல் நிவாரண நிதிக்கு புதுடில்லியிலிருந்து தோழர் என். எஸ். கோபி சந்தர் என்பார் ரூ. 50 அனுப்பியுள்ளார்—பெற்றுக் கொண்டோம்.

★

கழகத் தோழர்கள் காணிக்கை

சேலம் அரிசிப்பாளையம் திராவிட மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால், புயல் நிவாரண நிதிக்கென, 26—1—56-ல், தோழர் எ. மாரியப்பன் தலைமையில் 'மரணவாயில்' எனும் நாடகம் நடத்தப்பட்டது. நாடகச் செலவுகள் போக மீதி ரூ. 55—12—0-ம் புயல் நிதிக்கென அனுப்பிவைக்கப்பட்டுள்ளது—பெற்றுக்கொண்டோம்.

* * *

புயல் நிதிக்கென சென்னை கோட்டை இரயில் நிலைய சோடா ஸ்டால் தோழர் இ. அன்புச்சுடர் மூலம் தோழர்கள் பலர் ரூ. 17 திரட்டி அனுப்பியுள்ளனர். விவரம்:—பழனியப்பன் 2-8-0; சண்முகம் 2-8-0; பஞ்சாபகேசன் 2-8-0; அன்புச்சுடர் 2-8-0; பூபதி 1; சந்தாசலம் 1; ஈசுவரன் 1; ரங்குபதி 1; கோவிந்தராசன் ரூ. 1; வெங்கடராமன் 1; தாமோதரன் 1.

—தி. மு. க. தலைமை நிலையம்.

'அம்பர் சர்க்கா' வேலை முறை ஆராயப்படுமாம்!

குழு ஒன்று நியமனமாகிறது

புதுடில்லி, பிப். 24—

'அம்பர் சர்க்கா'வில் வேலை முறை பற்றிய பல்வேறு அம்சங்களை ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமிக்கும்படி, அகில இந்திய காதி, கிராமத் தொழில்கள் போர்டு கூறியுள்ள யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொண்டு, கமிட்டி ஒன்றை நியமித்துள்ளனர்.

12 கழகத் தோழர்கள் உள்ளிட்ட 24 பேர்களுக்கு ஒரு வாரம் சிறை

200 பேர்கள்வரை கைதாயினர்

சேத்தூர் வட்டத்தில் பொது வேலைநிறுத்தம் வெற்றி

சேத்தூர், முகவூர், தளவாய்புரம் பகுதிகளில் பிப். 20—பொது வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது. அன்று இந்தப் பகுதிகளைச் சேர்ந்த கூட்டணித் தோழர்கள் 200 பேர்வரை கைது செய்யப் பட்டிருக்கின்றனர்.

இந்த ஊர்களில் பூரணமாகப் பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு முதலியன நடைபெறுவதற்குக் காரணமாக இருந்த சர்வ கட்சிக் கூட்டணியின் செயற் குழுவினர் 24 பேர்களும் கைது செய்யப்பட்டு, வழக்கு நடைபெற்று அவர்களுக்கு ஒரு வாரம் சிறைத் தண்டனை தரப்பட்டிருக்கிறது.

தண்டனைபெற்ற 24 தோழர்களில் 12 பேர்கள் தி. மு. கழகத் தோழர்களாவர்.

சாலையோர 'ரோமியோக்'களுக்கு எதிராக 2000 மாணவிகள் வேலை நிறுத்தம்

ரெய்ப்பூர்—

சாலையோர ரோமியோக்களின் மீது தகுந்த உடனடியான நடவடிக்கை எடுக்கக் கோரி இங்குள்ள 'லட்சுமி நாராயணன் வித்யா மந்திரை'ச் சேர்ந்த சுமார் 2000 மாணவிகள் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர்.

நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் ஒன்று வந்து, பின்னர் மாலையில் கூட்டம் ஒன்றும் நடத்தியிருக்கின்றனர்.

காலையில் பள்ளிக்கூடம் திறக்கும்போதும், மாலையில் பள்ளிக்கூடம் முடியும்போதும் ஆங்காங்கே போலீஸ்காரரை நிறுத்தி வைத்துத் தவறான நடத்தையிலும், தன்புறுத்தலிலும் ஈடுபடுகிற சமூக விரோத சக்திகளிடமிருந்து பெண்களைப் பாதுகாக்க வேண்டுமென அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது

மாணவர்கள் சிலரது தவறான நடத்தையை எதிர்த்ததிற்காக ஆசிரியை ஒருவர் சில மாணவர்களால் தாக்கப்பட்டதாயும் கூறப்பட்டது.

'சுதந்திர'சர்க்கார் போக்கு

மே தினத்தன்று வேலைக்கு வராதிருப்பது சட்டவிரோதமானதாம்!

அலகாபாத், பிப். 23—

மே தினத்தன்று வேலைக்கு வராத தொழிலாளர்கள், சட்டவிரோதமான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாகக் கருதப்படுகின்றனர்—'சுதந்திர' சர்க்காரால்!

உத்தர பிரதேசத்தில் கான்பூரில் உள்ள ஏழு ஆலைகளைச் சேர்ந்த—ஆறு நெசவாலைகள் ஒரு சணல் ஆலை—29,000 தொழிலாளர்கள் 1953-ம் ஆண்டில், மே தினத்தன்று வேலைக்கு வராதிருந்தனர்; அதனால் அவர்களுடைய 'சர்வீஸ்' துண்டிக்கப்பட்டதாக ஆலை முதலாளிகள் கூறிவிட்டனர்.

இது குறித்து விசாரித்த தொழில் நீதி மன்றம் முதலாளிகள் கூற்று சரி என்றும், மே தினத்தன்று, தொழிலாளர்கள் வேலைக்கு வராதிருப்பது சட்டவிரோதமான வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாகும் என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறதாம்!

மருந்து உற்பத்தி தொழில்

இந்திய சர்க்காரே ஏற்று நடத்துமாம்

சென்னை, பிப். 26—

இந்தியாவில் மருந்துக்கள் உற்பத்தித் தொழிலை இந்திய சர்க்காரே ஏற்று நடத்துவது குறித்து யோசித்துக்கொண்டுள்ளதாக சென்னை சுகாதார இலாகா அமைச்சர் ஏ. பி ஷெட்டி கூறியுள்ளார்.

மீண்டும் கைப்பற்றினராம்

ஆமதாபாத், பிப். 26—

கட்ச் பிரதேசத்தில், இந்திய எல்லைக்குள் 4 மைல் தூரத்தில் சில நாட்களுக்கு முன்பு பாகிஸ்தான் படையினரால் கைப்பற்றப்பட்டிருந்த 'சாட்' என்ற மேய்ச்சல் பகுதியை, இந்திய இராணுவத்தின் ரோந்துப் படையினர் நேரிரவு எட்டு மணிக்கு அமைதியாக மீண்டும் கைப்பற்றிவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தித் திணிப்பு நடவடிக்கைகள்

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

தாயும் அவற்றில் மொத்தம் 300 பேர் படித்து வருகின்றனர் என்றும் தெரிகிறது.

ஆங்கிலத்தின் உபயோகத்தைப் படிப்படியாகக் குறைத்து வந்து அதற்குப் பதிலாக இந்தியை இந்தியாவின் அரசாங்க மொழியாக உபயோகத்துக்குக் கொண்டுவருவதற்காக அரசியல் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டை நிறைவேற்றும் பொருட்டு, இந்திய சர்க்கார் ஒரு திட்டத்தை தயாரித்து, அதன்கீழ், மத்திய சர்க்கார் ஊழியர்கள் இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அம்மொழியில் வைக்கப்படும் பரீட்சை யொன்றில் அவர்கள் தேற வேண்டுமென்றும் கோரப்பட்டனர்.

அந்தத் திட்டத்தின்கீழ் மத்திய கல்வி மந்திரி அலுவலகம் டில்லியிலும், புதுடில்லியிலும் இந்தி கற்றுத்தரும் நிலையங்களை ஆரம்பித்தது. அவற்றில், அலுவலக நேரங்களுக்கு முன்னும், அதற்குப் பின்னரும் இந்தி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தி கற்பிப்பதற்காகக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லையாம்; விருப்பத்தின் அடிப்படையின் மீதே மாணவர்கள் வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனராம்.

ஆறு மாத கால படிப்புக்குப் பிறகு, மாணவர்கள் 'இந்தி பிரபோத் பரீட்சை' எனப்படும் பரீட்சையொன்றில் தேறவேண்டுமாம்!

இந்தி பிரபோத் பரீட்சைகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ. 50; ரூ. 30; ரூ. 20 பரிசுகளாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

மத்திய உள்விவகார மந்திரி அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ், 1955 அக்டோபர் மாதத்திலிருந்து, அலுவலக நேரங்களிலும் இந்தி 'பிரபோத்' வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றனவாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.